**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 28/ 2023**

Deposition of Witness : DW4

| Name | தெய்வநாயகி | Taluk | |
|---|---|---|---|
| Husband Name | ராமசாமி | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 08.10 .2025.** | | | |

1, 4, 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் 3 வது எதிரி ஆவேன். 17.10.2012 ம்தேதி முதல் நான் எனது மூத்த மகள் ரேவதியின் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு 2 பெண், 1 ஆண் உள்ளார். எனது 2 மகளையும் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நானும், எனது மகனும் வெங்கமேட்டில் தனியாக வீடு எடுத்து குடியிருந்தோம். அப்போது என் மகன் HDFC வங்கியில் பணிபுரிந்தார். எனது மகனுக்கு பெண் பார்த்து கொண்டிருந்தோம். அப்போது அருகில் உள்ள அழகேஸ்வரி , சித்திரைசெல்வி ஆகியோர்கள் அழகேஸ்வரியின் தங்கை மகள் பொள்ளாச்சியில் இருப்பதாகவும் சொன்னார்கள். நாங்கள் அழகேஸ்வரியின் தங்கை மகளை பார்த்து பேசி பொள்ளாச்சியில் எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தோம். திருமணம் முடிந்த பிறகு எனது வீட்டின் அருகே ஒரு வீடு வாடகை எடுத்து எனது மகனையும், மருமகளையும் தங்க வைத்து , நான் தனியாக இருந்தேன்.

2) எனது மூத்த மகளின் கணவர் விபத்தில் இறந்து விட்டதால் நான் என் மூத்தமகள் ரேவதியின் வீட்டில் சென்று தங்கினேன். ரேவதியின் கணவரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.15 ஆக**

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

**குறியிடப்படுகிறது.** எனது மருமகள் கருவுற்றார். எனது சம்பந்தி வீடு வளைகாப்பு போடுவதற்கு என்னிடம் வந்து கேட்டார்கள். மருமகன் இறந்த துக்கத்தில் இருப்பதால் ஒரு மாதம் கழித்து வைத்து கொள்ளலாம் என்று கூறினேன். 28.10.2012 எனது மருமகளுக்கு வளைகாப்பு வைத்துள்ளோம் என்று என் மகனும், என் மருமகளும் அழைத்தார்கள். எனது மூத்தமகளின் கணவர் இறந்து 10 நாள்கூட ஆகவில்லை என்றும், அதனால் நானும், என் மகளும் வரமாட்டோம் என்றும், நீங்கள் நடத்தி கொள்ளுங்கள் என்று சொன்னேன். வளைகாப்பிற்கு செல்லவில்லை என்பதால் என் மகனும், மருமகளும் என்னிடம் பேசவில்லை. எனது மருமகளுக்கு பிரசவத்திற்காக ஒட்டன்சத்திரம் CF மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் சொன்னார்கள்.

3) நான் மட்டும் சென்று பார்க்க போனேன். அப்போது வளைகாப்பிற்கு வரவில்லை, இப்போது ஏன் வந்தீர்கள் என்று கேட்டார்கள். என் மகன் நீங்கள் போங்க குழந்தை பிறந்தபிறகு தகவல் சொல்கிறேன் , அப்போது வாங்க என்று சொன்னான். நான் கருருக்கு வந்துவிட்டேன். அந்த வாரத்திலேயே குழந்தை பிறந்து விட்டதாக என் மகன் சொன்னான். நான் பார்க்க சென்றபோது என்னை பார்க்க அனுமதிக்கவில்லை. குழந்தையை மட்டும் காட்டுங்கள் என்று சொன்னேன். ஆனால் அனுமதிக்கவில்லை. அதன்பின்னர் கருருக்கு திரும்ப வந்துவிட்டேன். நான் என் மகளிடம் சொல்லி அழுதேன். அதற்கு என் மகள் சரியாகிவிடும் என்று சொன்னார். தற்போது வரைக்கும் என் மகனின் குழந்தையை பார்க்க சென்றால் வழக்கு தாக்கல் செய்துவிடுவேன் என்று மிரட்டுகிறார்கள். அதன்பின்னிட்டு என்னை பார்க்கவுமில்லை, பேசவுமில்லை. பொள்ளாச்சி நீதிமன்றத்தில் இருந்து எங்களுக்கு குடும்ப வன்முறை செய்ததாக அழைப்பாணை வந்தது.

4) அதன்பின்பு தான் என் மகனுக்கும், மருமகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது. மேற்படி வழக்கில் 2 வருடங்கள் கழித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னிட்டு நான் அவர்களுடன் பேச்சு வார்த்தையில்லை. நாங்கள் தனியாக வாழ்ந்து வருகிறோம். 2 வருடங்களுக்கு முன்பு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் இருந்து எங்கள் மீது

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

வழக்கு செய்திருப்பதாக சொன்னார்கள். எனது மகன் 2 வது திருமணம் செய்தார் என்றும், அதற்கு நாங்கள் உடந்தையாக இருந்தோம் என்றும், ஆஜராகவில்லை என்றால் கைது செய்வோம் என்று சொன்னார்கள். அதன் பின்னிட்டு நாங்கள் இந்த வழக்கை நடத்தி வருகிறோம். இது பொய் வழக்காகும், என்னை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க கேட்டு கொள்கிறேன்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது மகனுக்கும், ஜோதி முருகேஸ்வரிக்கும் 30.01.2012 ம்தேதி பெரியோர்கள் பேசி திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது மகள் ரேவதி எங்கு குடியிருந்தார் என்றால் வேறு தெருவில் குடியிருந்தார்கள். எல்லாம் ஒரே பகுதி சேர்ந்தது என்றால் சரிதான். எனது மகள் ரேவதி வீட்டில் 17.10.2012 ம்தேதி முதல் வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு எனது மருமகளின் வீட்டில் குடியிருந்தேன் என்றால் சரிதான். திருமணம் ஆகி 3 வது நாளில் ஜோதி முருகேஸ்வரிக்கு காக்கா வலிப்பு நோய் ஏற்பட்டதாகவும், அதற்கு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பார்த்தோம் என்றால் சரிதான். எனது மகன் பாலசுப்ரமணி அவருடைய முதல் விசாரணையில் ஜோதி முருகேஸ்வரி வீட்டில் இருந்து திருமணத்தின்போது 8 பவுன் நகை கொடுத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2) ஜோதி முருகேஸ்வரிக்கு உடல்நிலை சரியில்லை என்ற விவரம் முன்பே சொல்லியிருந்தார்கள் என்றால் சரியல்ல. 2013 ம் வருடம் எனது மகனுக்கும், மருமகளுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். எனது மகன் HDFC வங்கியில் பணிபுரிந்தபோது நித்யா என்பவர் மூலமாக வீட்டுமனை வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். நித்யா என்பவருடன் எனது மகனுக்கு தொடர்பு இருந்த விவரம் தெரியவந்ததால் ஜோதி முருகேஸ்வரி என் மகனுடன் தங்காமல் வெளியே அவரது பெற்றோர் வீட்டில் தனியாக தங்கி இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தனியாக வசித்து வந்தோம். ஜோதி முருகேஸ்வரி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீதும், என் மகன் , என் கணவர், எனது 2 மகளின் மீதும் குற்ற

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள எனது முகவரி மற்றும் எதிரிகளின் முகவரி சரிதான் என்றால் சரிதான்.

3) இன்று வரையும் எனது மகனுக்கும், ஜோதிமுருகேஸ்வரிக்கும் விவாகரத்து எதுவுமில்லை என்று சொன்னால் சரிதான். என் மகன் அவருடைய முதல் விசாரணையில் எனது சம்பந்திவீட்டில் வளைகாப்பு நடத்தியதாக சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 திருமணத்திற்கு முன்னிட்டே உடல்நிலை சரியில்லை என்ற விவரம் சொன்னார் என்றும், அதனால் நாங்கள் அதிக வரதட்சணை கேட்டு அ.சா.1 ஐ உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் , அடித்து துன்புறுத்தி, கொலை மிரட்டல் விடுத்தோம் என்றும், அதை மறைத்து எதிரிகளை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.